## மறைந்த சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும்

# சீதாராம் யெச்சூரி - ரத்தன் டாடா - எஸ்றா சற்குணம் உள்ளிட்டோருக்கு இரங்கல்!

## சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் புகழாரம்!

சென்னை, டிச. 10-

**மறைந்த சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடா, பேராயர் எஸ்றா சற்குணம் உள்ளிட்ட பெருமக்களுக்கு சட்டப் பேரவையில் நேற்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு, இரங்கல் தீர்மானங்களை வாசித்து புகழாரம் சூட்டினார்.**

சட்டப் பேரவை நேற்று கூடியதும் முன்னாள் உறுப்பினர்கள் ஜ. முகமது கனி, எஸ்.ஆர். ஜெயராமன், பி.எம். தங்கவேல்ராஜ், சி. கணேசன், கா.கோ. ரமேஷ், சி. சண்முகம், டாக்டர் வெ. புருஷோத்தமன், க. சுந்தரம், ஓ.ஆர். இராமச்சந்திரன், எஸ்.என். பாலசுப்ரமணியன், மா. தண்டபானி, கி.செல்வராஜ், ஏ. கோதண்டம், திருமதி மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் மற்றும் சி.சுப்புராயர் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.



நேற்று (9.12.2024) நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில், இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் தலைவர் இரா. சம்பந்தன், மேற்கு வங்க மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. புத்ததேவ் பட்டாச்சார்ஜீ, இந்திய இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி ஜெனரல் எஸ். பத்மநாபன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, ஈசிஜ திருச்சபையின் பேராயர் எஸ்றா சற்குணம், பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடா, மூத்த பத்திகையாளர் முரசொலி செல்வம், தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் பி. சங்கர் மற்றும் சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோரது மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

### இரங்கல் குறிப்புகள்!

இதுகுறித்து பேரவையில் பேரவைத் தலைவர் வாசித்த இரங்கல் தீர்மானங்கள் வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான ஜ. முகமது கனி அவர்கள் 17-6-2023 அன்றும், எஸ்.ஆர். ஜெயராமன் அவர்கள் 17-2-2024 அன்றும் பி.எம். தங்கவேல்ராஜ் அவர்கள் 22-7-2024 அன்றும், சி. கணேசன் அவர்கள் 26-7-2024 அன்றும், கா.கோ. ரமேஷ் அவர்கள் 15-8-2024 அன்றும், சி. சண்முகம் அவர்கள் 27-8-2024 அன்றும், டாக்டர் வெ.புருஷோத்தமன் அவர்கள் 8-9-2024 அன்றும், க. சுந்தரம் அவர்கள் 18-9-2024 அன்றும், ஓ.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் 4-10-2024 அன்றும், எஸ்.என். பாலசுப்ரமணியன் அவர்கள் 18-10-2024 அன்றும், மா. தண்டபாணி அவர்கள் 27-10-2024 அன்றும், கி.செல்வராஜ் அவர்கள் 8-11-2024 அன்றும், ஏ. கோதண்டம் அவர்கள் 12-11-2024 அன்றும், திருமதி மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் அவர்கள் 20-11-2024 அன்றும் மற்றும் சி. சுப்புராயர் அவர்கள் 29-11-2024 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜ. முகமது கனி அவர்கள் 1985-1988 ஆம் ஆண்டுகளில் புதுக்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

எஸ்.ஆர். ஜெயராமன் அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் சேலம்-1 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

பி.எம். தங்கவேல்ராஜ் அவர்கள் 1980-1984 மற்றும் 1985-1988 ஆகிய ஆண்டுகளில் கிருஷ்ணராயபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

சி.கணேசன் அவர்கள் 1980-1984 ஆம் ஆண்டுகளில் அச்சரப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றினார்கள்.

கா.கோ. ரமேஷ் அவர்கள் 2011-2016 ஆம் ஆண்டுகளில் திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றினார்கள்.

சி. சண்முகம் அவர்கள் 1989-1991 மற்றும் 1996-2001 ஆகிய ஆண்டுகளில் ஆலந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் பெண்ணாகரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

க. சுந்தரம் அவர்கள் 1989-1991 மற்றும் 1996-2001 ஆகிய ஆண்டுகளில் பொன்னேரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1990-1991 மற்றும் 1996-2001 ஆகிய ஆண்டுகளில் அமைச்சராகவும் நன்கு பணியாற்றினார்கள்.

ஓ.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் 1991-1996, 1996-2001 மற்றும் 2001-2006 ஆகிய ஆண்டுகளில் கம்பம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

எஸ்.என்.பாலசுப்ரமணியன் அவர்கள் 1996-2001 ஆம் ஆண்டுகளில் பவானி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

மா.தண்டபாணி அவர்கள் 2006-2011 ஆம் ஆண்டுகளில் வேடசந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

கி. செல்வராஜ் அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூர் மேற்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

ஏ. கோதண்டம் அவர்கள் 1989-1991 மற்றும் 1996-2001 ஆகிய ஆண்டுகளில் திருப்பெரும்புதூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திருமதி மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் அவர்கள் 1977-1980 மற்றும் 1980-1984 ஆகிய ஆண்டுகளில் நியமன உறுப்பினராக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

சி. சுப்புராயர் அவர்கள் 1985-1988 ஆம் ஆண்டுகளில் கம்பம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.

### இரங்கல் தீர்மானங்கள்!

### இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் தலைவர் இரா. சம்பந்தன்

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் அவர்கள் 30-6-2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணத் துயரமும் கொள்கிறது.

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தனது வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான இரா. சம்பந்தன் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக அரைநூற்றாண்டு காலம் ஆற்றிய பங்களிப்பும், அதிகாரப் பகிர்வுக்கான அறவழிப் போராட்டங்களும் அவரை இலங்கை அரசியலில் போற்றத்தக்க தலைவராக விளங்கச் செய்துள்ளது. இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராகப் பணியாற்றி அனைத்துத் தரப்பு மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், இலங்கைத் தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது.

### மேற்கு வங்க மாநில முன்னாள் முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்ஜீ

இடதுசாரி இயக்கத்தின் முதுபெரும் தலைவரும், மேற்கு வங்க மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சருமான புத்ததேவ் பட்டாச்சார்ஜீ அவர்கள் 8-8-2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மேற்கு வங்க மாநில நலனில் மிகுந்த பற்றுக் கொண்டவராகத் திகழ்ந்த

புத்ததேவ் பட்டாச்சார்ஜீ அவர்கள் சமத்துவச் சமுதாயத்தை வளர்த்தெடுக்கவும், விளிம்புநிலை மக்களின் நலனுக்காகவும், சமூகநீதிக்காக குரல் கொடுக்கவும் தனது வாழ்வை அர்ப்பணித்தவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்திய இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி ஜெனரல் எஸ். பத்மநாபன்,

இந்திய இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி ஜெனரல் எஸ். பத்மநாபன் அவர்கள் 18-8-2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

ஜெனரல் எஸ்.பத்மநாபன் அவர்கள் முன்மாதிரியான தலைமையும், தேசத்தின் பாதுகாப்பில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் கொண்டு பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது.

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி,

இடதுசாரி இயக்கத்தின் முதுபெரும் தலைவரும் இந்திய அரசியலில் மூத்த தலைவருமான தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் 12-9-2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.



சீதாராம் யெச்சூரி அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் நலன் காப்பதிலும் மதச்சார்பின்மை, சமூகநீதி, சமத்துவக் கொள்கைகளை பரப்புவதிலும் தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர். இவர், 2005-2011 மற்றும் 2011-2017 ஆகிய ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் சிறப்புறப் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

### ஈசிஜ திருச்சபையின் பேராயர் எஸ்றா சற்குணம்

ஈசிஜ திருச்சபையின் பேராயரும், இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவருமான எஸ்றா சற்குணம் அவர்கள் 22-9-2024 அன்று தமது 86-வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.



பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள் கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாக விளங்கியதோடு அனைத்து சமூக மக்களின் நன்மதிப்பையும்பெற்றவர். சிறுபான்மையினர் நலன் பாதுகாக்கப்படவும், அவர்களது உரிமைகள் வென்றெடுக்கப்படவும் தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

### பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடா

பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடா அவர்கள் 9-10-2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

ரத்தன் டாடா அவர்கள், டாடா நிறுவனத்தை உலகம் முழுவதும் விரிவடையச் செய்து உலகின் முன்னணி தொழிலதிபராகவும், இந்திய தொழில் துறையின் பெருந்தூணாக விளங்



கிய போதும் எளிமையும், மனிதநேயத்தின் அடையாளமாகவும் திகழ்ந்தவர். பத்ம பூசன் மற்றும் பத்ம விபூசன் ஆகிய உயரிய விருதுகளை பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

### தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் பி. சங்கர்

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் பி. சங்கர் அவர்கள் 3-11-2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

செய்யாறு உதவி ஆட்சியராக தனது இந்திய ஆட்சிப் பணியைத் துவங்கிய திரு. பி. சங்கர் அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக சிறப்பாக பணியாற்றியவர். மேலும், அவர் ஒன்றிய அரசின் செயலாளர் பதவிகளிலும், ஒன்றிய திட்டக் குழுவின் செயலாளர் பதவியிலும், ஒன்றிய விழிப்புணர்வு ஆணையத்தின் தலைவராகவும் திறம்பட பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது.

### புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் டி. இராமச்சந்திரன்

புதுச்சேரி முன்னாள் முதலமைச்சரும் மற்றும் சபாநாயகருமான டி. இராமச்சந்திரன் அவர்கள் நேற்று 8-12-2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

புதுச்சேரியின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய

டி. இராமச்சந்திரன் அவர்களது அரசியல் அனுபவமும், மக்கள் சேவையும், அணுகுமுறையும் என்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும் புதுச்சேரி மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு இரங்கல் தெரிவித்து தீர்மானங்களை வாசித்தார்.

அதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறார்கள் என்று பேசினீர்களே என்ன செய்தீர்கள் என்று ஒரு கேள்வியைக் கேட்டார். எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்து இருக்கிறார்கள். நான் கூட ஆதாரமில்லாமல் பேசக் கூடாது என்று அமைதியாக இருந்தேன். ஆனால் இப்போது ஆதாரத்தைக் கேட்ட பிறகு எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக அங்கே எதிர்த்து இருக்கிறார்கள். என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

### எதிர்க்கட்சித் தலைவர் புரிந்து கொள்ள வேண்டும்!

டங்ஸ்டனுக்கு எதிராக அங்கே போராட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில் அந்த மாவட்டத்தில் அமைச்சராக இருக்கின்ற மூர்த்தி அவர்கள் நேரடியாகச் சென்று போராட்டத்தினுடைய தன்மை குறித்து அறிந்து கொண்டு அதனை நிறுத்துங்கள் உங்களுக்கு ஆதரவாக இந்த அரசு இருக்கும் என்று சொல்லி அதற்குப் பிறகு முதலமைச்சர் கடிதம் எழுதி இருக்கிறார் என்ற விவரத்தையும் சொல்லி சட்டமன்றத்தில் இது போன்று தீர்மானத்தை நாங்கள் கொண்டுவரப் போகின்றோம் என்று அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடத்தில் சொல்லி அதற்குப் பிறகு தான் இந்தத் தீர்மானம் இங்கே வந்திருக்கின்றது என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்றிய அரசு இது விஷயத்தில் ஏலம் விட்டுவிட்டதாக சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்த அரசைப் பொறுத்த வரையில் நிச்சயமாகச் சொல்கிறேன் ஏலம் விட்டாலும் சரி, நிச்சயமாக உறுதியாக இந்த அரசு அதற்குரிய அனுமதியை தருவதற்கான வாய்ப்பே கிடையாது. நான் முதலமைச்சராக இருக்கிற வரையில் நிச்சயமாக ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தை கொண்டு வர முடியாது. அது வந்தால் அதனை தடுத்தே தீருவேன். அதனை திரும்பத் திரும்ப சொல்கிறேன். நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கின்ற வரையில் நிச்சயமாக அதனை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அனுமதிக்க மாட்டோம், அனுமதிக்க மாட்டோம்! இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதிபட தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய துரைமுருகன்; திட்டத்தை தமிழ்நாடு அரசு அனுமதிக்காது என்று சட்டப் பேரவையிலேயே முதல்வர் பிரகடனப்படுத்தியிருக்கிறார். முதல்வர் ஸ்டாலின் தெளிவாக சொல்லிவிட்டார், இனியும் தொடர்ந்து பேசுகிறீர்கள் என்றால், நீங்கள் வேதாந்தா நிறுவனத்துடனேயே பேசி விடலாம் என்று கூறினார். அதனை தொடர்ந்து டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு எதிரான தமிழக அரசின் தனித் தீர்மானத்திற்கு அனைத்து கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். அதனை தொடர்ந்து அரிட்டாப்பட்டி டங்க்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முயற்சிக்கு எதிரான தனித்தீர்மானம் அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது.